O.S. 1/2018

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்: 28.03.2025

DW1: பரந்தாமன் த/பெ– பாலகிருஷ்ணன்

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் சீனியர் மேனேஜராக வேலை பார்த்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் எனது மாத வருமானத்தை பற்றி நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் அறிவிப்பில் சொல்லியுள்ளேன். நான் எனது தகப்பனாருக்கு எந்த ஊரில் வேலை பார்க்கும் போது கடைசியாக பணம் அனுப்பினேன் என்று சொல்லவில்லை என்று சொன்னால் நான் ஊருக்கு வரும் போது பணம்கொடுப்பேன். நான் கடைசியாக செங்கோட்டையில் வேலை பார்த்து ஓய்வு பெற்றேன். நான் நிதிமுறைக்கேட்டில் ஈடுபட்டு பணி நீக்கத்திற்கு பயந்து விருப்ப ஓய்வு பெற்று விட்டேன் என்றால் எனது உடல்நலை குறைவினால் ஓய்வு பெற்றுவிட்டேன். 18.12.1991 ம் வருடம் நானும், எனது சகோதரர் ராஜரத்தினமும் தாவா சொத்து சம்மந்தமாக பாகப்பிரிவினை ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்தி கொண்டோம் என்றால் சரியல்ல. 18.12.1991 ல் பாகப்பிரிவினை ஒப்பந்த பத்திரத்திற்கான முத்திரைதாளை நான் தான் எனது பெயரில் கடந்த 16.12.1991 ல் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி முத்திரை தாளை சாத்தூாரை சேர்ந்த பரமாநந்தம் என்ற முத்திரைதாள் விற்பனையாளரிடம் இருந்து வாங்கினேன் என்றால் சரியல்ல. 18.12.1991 பாகப்பிரிவினை ஒப்பந்த பத்திரத்தில் தாவா சொத்தில் யார் யாருக்கு பாகம் உள்ளது என்ற விபரம் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் கடந்த காலத்தில் ஸ்ரீகாயத்திரி மேட்ச் ஒர்க்ஸ் L4/N117M/79 ல் தீப்பெட்டி தொழிற்சாலை

இயங்கி வந்தது என்றால் சரிதான், அது எனது தகப்பனாருக்கு சொந்தமானது இருந்தது, ராஜரத்தினம் அதற்கு உரிமம் பெற்று நடத்தி வந்தார். தாவா சொத்தின் பழைய கதவு எண்.108/டி, புதிய எண்.1/105 என்று உள்ளது என்றால் சரிதான். 18.12.1991 ம் பாகப்பிரிவினை பத்திரத்தை சாத்துாரை சேர்ந்த சந்தன மாரிமுத்து என்பவர் எழுதினார் என்றால் அந்த ஆவணம் பற்றி எனக்கு தெரியாது. 18.12.1991 ம் பாகப்பிரிவினை ஒப்பந்த பத்திரத்தில் எனது தகப்பனார் கையெழுத்து செய்துள்ளார் என்றால் எனது தாய், தகப்பனார் கையெழுத்து செய்யவில்லை. 8.12.1991 ம் பாகப்பிரிவினை ஒப்பந்த பத்திரத்தை விற்பனை செய்த பரமாநந்தம் என்பவரை விசாரணை செய்ய எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். 18.12.1991 ம் பாகப்பிரிவினை ஒப்பந்த பத்திரத்தினை எழுதியவரையும் விசாரணை செய்ய எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். 18.12.1991 ம் பாகப்பிரிவினை ஒப்பந்த பத்திரத்தில் என் கையெழுத்து வட்டார தடயவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி ஒப்பீடு செய்ய சம்மதமா என்றால் நான் கையெழுத்து செய்யவில்லை. 18.12.1991 ம் பாகப்பிரிவினை ஒப்பந்த பத்திரத்தில் உள்ள எனது பெற்றோர்கள் கையெழுத்தை பி.வா.சா.ஆ.4 உடன் ஒப்பீட்டு பார்க்க எனக்கு சம்மதமா என்றால் அவர்கள் கையெழுத்து செய்யவில்லை. 18.12.1991 ம் பாகப்பிரிவினை ஒப்பந்த பத்திரத்தின் படி எனக்கு தாவா சொத்து கிடைக்காது என்பதால் நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.14 ஆவணத்தை நான் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த தீர்ப்புரையில் அதன் 18.12.1991 ல் ஆவணத்தின் அசல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா சொல்லப்பட்டுள்ளது என்றால் நாங்கள் தாக்கல் செய்யவில்லை, எனது சகோதரர் தாக்கல் செய்திருப்பார். பி.வா.சா.ஆ.1 ல் தாவா சொத்து பற்றிய விபரம் உள்ளது. மேற்கண்ட தாவா சொத்தில் கூரை வீடு இல்லை என்றால்

ஓட்டு வீடாக இருந்து தற்போது காரைவீடாக உள்ளது. தாவாசொத்தில் எனது உடன் பிறந்த சகோதர, சகோதரிகளுக்கு உரிமை உள்ளது என்று சொன்னால் அது எழுதிக்கொடுக்கப்பட்டு விட்டதால் மற்றவர்களுக்கு உரிமை இல்லை. அனைவருக்கும் தாவா சொத்தில் உரிமை உள்ளது என்றும், நான் அதை அபகரிக்கும் எண்ணத்தில் வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு சென்னை பழைய பல்லாவரத்திலும், செங்கல்பட்டிலும் தலா ஒரு வீடு உள்ளது என்றால் அது வாடகை வீடு. திண்டுக்கல் மாவட்டம், நாகல்நகர், சேனியர் தெருவில் எனக்கு ஒரு வீடு உள்ளது என்றால் சரிதான், அது எனது தாயாரின் மூலம் கிடைத்தது. 25.06.2012 ல் தாவா சொத்தில் நான் தாவா சொத்தில் தற்காலிகமாக குடியிருப்பதாக சான்று வாங்கியுள்ளேன் என்றால் சரிதான், எரிவாயு இணைப்பு பெறுவதற்காக பெற்றேன். 20.09.2016 ல் தாவா சொத்தில் நான் தாவா சொத்தில் நிரந்தரமாக குடியிருப்பதாக சான்று வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். 20.03.2020 ல் தாவா சொத்தில் நான் தாவா சொத்தில் கடந்த இரண்டு வருடங்களாக குடியிருப்பதாக சான்று வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். நான் வழக்கிற்காக நான் மேற்படி தாவா வீட்டில் குடியிருப்பதாக பொய்யாக சான்று வாங்கியுள்ளேன் சரியல்ல. மேற்படி தாவா வீட்டிற்கு எனக்கு பட்டா இல்லை. தாவா வீட்டிற்கான வீட்டுவரி ரசீது, தண்ணீர் வரி ரசீது என் பெயரில் இல்லை. வாதியின் தகப்பனாருக்கு ராஜ ரத்தினத்திற்கு தாவா வீடு மட்டும் தான் உள்ளது என்றால் தாவா வீடானது எனது பெயரில் உள்ளது. எனது பண பலத்தினால் நான் தாவா வீட்டை ஆக்கிரமிப்பு செய்து பூட்டி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஆக்கிரமிப்பு செய்துள்ள தாவா வீட்டில் குடியிருக்கவில்லை என்றும், காஞ்சிபுரம், திண்டுக்கல், சென்னையில் குடியிருக்கிறேன் என்றால் சரியல்ல, 4 மாதங்கள் வரை குடியிருப்பேன். தாவா வீடு எனது சொந்த வீடு

இல்லை என்பதால் அடியாட்களை வைத்து வீட்டை பூட்டி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல, நான் குடியிருந்து வருகிறேன். 20.07.2012 ல் எனது தகப்பனார் பாலகிருஷ்ணன் எனக்கும், எனது சகோதரருக்கும் தாவா சொத்து உட்பட பல சொத்துக்களை தானசெட்டில்மெண்ட் மூலம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் எனது சகோதரி சந்திரா, அவரது கணவர் பாண்டி ஆகியோர்கள் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் சரிதான். தானசெட்டில்மெண்ட் பத்திரம் பற்றி எனக்கு தபால் வந்த போது தான் தெரியும் என்றால் சரிதான். எனது வழக்கறிஞர் மதுரை சேர்ந்த காசிராஜன். எனது சகோதரி சந்திராவுக்கும், எனது தகப்பனாருக்கும், எனது மற்றொரு சகோதரி சாந்தாவிற்கும் வழக்கறிஞர் காசிராஜன் என்றால் சாந்தாவிற்கு நோட்டரி ஒப்பம் மட்டும் செய்துள்ளார். 18.12.1991 ம் தேதிய பாகப்பிரிவினை ஒப்பந்தத்தின் படி எனது தகப்பனார் அவரது சொந்தமான சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை ஒப்பந்தம் ஏற்படுத்திவிட்டார் என்றும், நானும், எனது சகோதரி சந்திராவும் கூட்டாக சேர்ந்து எனது தகப்பனாரை மிரட்டி 2012 ம் வருட தானசெட்டில்மெண்டை மிரட்டி பதிவு செய்துள்ளோம் என்றும் அதனால் அந்த தானபத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் எனது தகப்பனாருக்கு நான் ஏற்படுத்திய மன உளைச்சலால் அவர் 2014 ல் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல, எனது சகோதரர் அவரை சரியாக பராமரிக்காததால் அவர் இறந்துவிட்டார். திண்டுக்கல், சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அ.வ.எண்.398/2012 ற்கும் இந்த தாவா சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. திண்டுக்கல், சார்பு நீதிமன்ற அ.வ.எண்.398/2012 தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.17 வரையிலான ஆவணங்கள்

வழக்கிற்காக பொய்யாக உருவாக்கப்பட்ட ஆவணங்கள் என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.